பட்டமளிப்பு விழா மலர்

KALAIMANRAM

Academy of Fine Arts and Yoga

presents



October 25, 2015

NIRUTHTHA NIRAIGNAR

Graduation Ceremony

KALAIMANRAM

Academy of Fine Arts and Yoga

presents

'நிருத்த நிறைஞர்'

பட்டமளிப்பு விழா மலர்

2014-2015

NIRUTHTHA NIRAIGNAR

Graduation Ceremony

நிறைஞ்சனா சந்துரு

அதிபர் 'கலைமன்றம்' கனடா



அதிபரின் ஆசிச் செய்தி

கடந்த 10 ஆண்டுகளில் 56 நிருத்த நிறைஞர்களையும், 25 ஆசிரியர் தர பட்டதாரி மாணவர்களையும் கலை உலகிற்கு வழங்கியுள்ள கலைமன்றம் 11வது பட்டமளிப்பு விழாவான இன்று, மேலும் 3 நிருத்த நிறைஞர்களையும் 4 ஆசிரிய தர பட்டதாரிகளையும் பிரசவிக்கின்றது.

வருடத்திற்கு சராசரி 8 ஆசிரியர் தரம் பெற்றவர்கள் கலைமன்றத்திலிருந்து வெளிவருகின்றார்கள். இவர்கள் எல்லாம் எங்கே? என்ன செய்கின்றார்கள்? என்ற கேள்விகள் உங்கள் மத்தியில் எழலாம் அல்லவா!

ஆமாம், இவர்கள் யாவரும் சிறந்த நடனக் கலைஞர்களாக தொடர்ந்தும் நிகழ்ச்சிகளை வழங்கி வருகின்றார்கள்.

'நிருத்த நிறைஞர் பட்டதாரிகள் சங்கம்' என்ற அமைப்பினூடாகவும், தனியாகவும், குழுவாகவும் சிறந்த நிகழ்ச்சிகளை தாமாகத் தயாரித்து வழங்குவதோடு சமூகத்துக்கும் நிதி உதவிகள் செய்து வருகின்றார்கள்.

'ஜனக் கென்றி' நடனக் கொம்பனியில் விசேட கலைஞர்களாக நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகின்றார்கள். அத்துடன் வெளிநாடுகளுக்கும் சென்று நடன நிகழ்ச்சிகளை வழங்கும் சந்தர்ப்பங்களையும் பெற்றுள்ளார்கள்.

இது மட்டுமன்றி, பலர் நடனப் பாடசாலைகளை நிறுவியும், சிலர் 'கலைமன்ற'த்தில் நடன ஆசிரியர்களாக என்னுடன் இணைந்தும் தாம் கற்ற கலையினை அடுத்த தலைமுறைக்கும் சிறப்பாக கற்பித்து வருகின்றார்கள்.

வருடாவருடம் 'அபிநயதர்ப்பணம்' என்னும் நிகழ்வினை நிருத்த நிறைஞர்களும் நாட்டியமாலை என்னும் நிகழ்வினை அவர்களது மாணவர்களும் சிறப்பாக வழங்கி வருகின்றார்கள் என்பது யாவரும் அறிந்ததே! அத்துடன் இவர்களுக்கு இன்றுவரை ஊக்கமளித்து உறுதுணையாக இருக்கும் இவர்களின் பெற்றார், சகோதரர், கணவர், மாமா, மாமி போன்ற அன்பான உறவுகளுக்கும் எனது வாழ்த்துக்கள்!

மேலும், 'கலைமன்றம்' இவ்வாண்டு சங்கீதம், வயலின் போன்ற பாடங்களையும் நடனத்துடன் கற்பிக்க தொடங்கியுள்ளதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன். வெகு விரைவில், நடனம் போன்று தரமான பரீட்சையினையும் ஆரம்பித்து பல திறமையான இசைக் கலைஞர்களையும் கலையுலகிற்கு வழங்கும் என உறுதி அளிக்கிறேன்.

எனது மாணவர்கள், தாம் கற்ற கலையில் நம்பிக்கையும், பக்தியும், ஆர்வமும் கொண்டு கலையுலகில் முன்மாதிரியாக சிறந்து விளங்குகின்றார்கள். கனடாவில் கலை இனி சாகாது என்ற நம்பிக்கையை எனக்கு அளித்துள்ளனர். இதனால், சமூகத்தில் யாவரும் உடல் ரீதியாகவும், உளரீதியாகவும், உத்தியோக ரீதியாகவும் பலன் பெறுவர். கனடா நாட்டின் பாடத்திட்டத்தில் பல்கலைக்கழகம் வரை நடனக் கலையினை 'கலைமன்ற' மாணவர்கள் வெகு விரைவில் எடுத்துச் செல்வார்கள் என்பது எனது உறுதியான நம்பிக்கை.

நிறைஞ்சனா சந்துரு

அதிபர் 'கலைமன்றம்' கனடா

சென்ற ஆண்டு கலைமன்றத்தின் நடனப் பரீட்சையில் நிருத்த நிறைஞர்களான சிந்து மரியா அன்ரனியின் சிந்து நாட்டிய மன்றமும், அனுஷியா ஜெயனின் சந்திர சேகரா நாட்டிய கல்லூரியும், வைஷ்ணவி சர்வேஸ்வராவின் நடன இசைக் கல்லூரியும், கார்மிளா கஜாந்தனின் கலைக் கார்மிளாலயம் நடனக் கல்லூரியும் பங்கேற்றுள்ளன.

சென்ற ஆண்டு பரீட்சையில் சிறப்பாக சித்தி பெற்ற 'கலைமன்றம்' மற்றும் அனைத்து கல்லூரிகளது மாணவர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவிப்பதோடு, இவ்வாண்டு நடனப் பரீட்சையில் தோற்றவுள்ள அனைவருக்கும் நல் வாழ்த்துகளையும் கூறுகின்றேன்.

மேலும், கலைமன்றத்தின் நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் சமூகம் தந்து அதன் வளர்ச்சிக்கும் சிறப்பிற்கும் உறுதுணையாக இருந்து வரும் ஆலோசகர்கள், கலைஞர்கள், ஆதரவாளர்கள், பெற்றார் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

எனது மாணவர்களின் திறமையினை மென்மேலும் வளர்த்துக்கொள்வதற்கு அரிய சந்தர்ப்பங்களை வழங்கி வரும், திரு. ஜனக் கென்றி அவர்களுக்கும் எனது நன்றிகளை சிறப்பாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நிறைவாக, அனைத்து மாணவ செல்வங்களும், அவர்களது முயற்சிகளிலும், வாழ்க்கையிலும். சிறந்து விளங்க எல்லாம் வல்ல நடராஜப் பெருமானை வணங்கி வாழ்த்துகின்றேன்.

குரு. நிறைஞ்சனா சந்துரு
கலைமன்ற நுண்கலை மற்றும்
யோகா பாடசாலை அதிபர்
கனடா

Smt. Nirainjana Chandru

Director, 'Kalaimanram'

Message from the Artistic Director

Over the past decade, Kalaimanram Academy of Fine Arts and Yoga has produced 56 "Niruththa Niraignar" Graduates and 25 teaching diplomats. This year is our school's 11th graduation, and we are proud to introduce 3 more "Niruththa Niraignar" Graduates and 4 more teaching diplomats. On that note, I would like to take this opportunity to congratulate Miss. Abhinayaa Chandru, Miss. Abarna Selvarajah, and Miss. Pirinthika Vijayaratnam on obtaining the "Niruththa Niraignar" title this year, and Miss. Nisagini Logendran, Miss. Meera Puvitharan, Miss. Saiprashani Jeyandran, and Miss. Abishna Jayasundararajah for obtaining the teaching diplomacy. With an average of 8 graduates passing out from our school every year, I am overjoyed to see them continue to be devoted and passionated performers and teachers while carrying out with their other professions and commitments as well.

On that note, I was so impressed to see their increased involvement and yearning to learn further in Bharathanatyam even after graduating from our school. By introducing the Niruththa Niraignar Graduates Association through Kalaimanram, I was truly able to see their fast growth in leadership skills, creativity, and choreography. I would really like to commend the initiative and hark work they continue to put in, especially while most of them have now established their own schools and have been providing professional training in dance education to their students as well. A few graduates have also taken the time to continue to teach as assistant teachers at Kalaimanram.In addition, our senior students have received the opportunity to work under one of the leading senior artists in Toronto, Mr. Janak Khendry at his company, the Janak Khendry Dance Company. Since 2005, our students have been invited to perform under his company as guest artists all throughout Toronto, Mexico, South Africa, The Middle East, and in India.

Every year, Kalaimanram's Niruththa Niraignar Graduates Association hosts "Abinaya Darpanam" and "Natya Maalai" and never fails to present successful shows. All of that success is definitely due to the support of our graduates' parents, husbands, and in-laws. Their encouragement towards our graduates has definitely kept them motivated to continue striving in this field. Additionally, I am happy to announce that Kalaimanram has now started providing classes in Carnatic vocal and violin and will be introducing standardised exams in these subjects very soon. Over the years, our students have developed a strong faith that they will be able to sustain a prolonged career filled with many opportunities in the future, and our graduate students are excellent role models in that prospect.

Bharathanatyam holds many mental, physical, and financial benefits to those who take the subject professionally. In fact, today students have the opportunity of continuing their dance education at a university level at internationally recognised and mainstream universities in Toronto! Thus, through teaching, our graduate students have been passing down rich context and valuable benefits to the new younger generation.With our graduate students establishing themselves with their own academies, I am proud to say that last year, Sinthukalaimanram, Chandrasegara Dance Academy, Kalai Karmelalaiyam, and Satvika Dance and Music Academy had participated in the examinations and have trained their students very well to receive good results. I am very happy to see their growth through their students.

I would like to conclude by wishing all our students for their career in dance and the future. I would also like to extend my thanks to Janak Ji, who devotes time out of his busy schedule to further support our students with the broadened aspects of this art form. Finally, I would like to give my heartfelt thanks to all our advisors, parents, colleagues, and fellow art-enthusiasts for continuing to show their endless encouragement and support to our school, which has inevitably been one of the reasons for our successful growth.

Artistic Director,
Guru Nirainjana Chandru
Kalaimanram Academy of
Fine Arts and Yoga

திரு எஸ். திருச்செல்வம்

முதன்மை ஆசிரியர், 'தமிழர் தகவல்'



கனடா கலைமன்றத்தின் பதினோராவது ஆண்டு நிருத்த நிறைஞர் பட்டமளிப்பு விழாவை வாழ்த்தி இச்செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழரின் நுண்கலைகளில் பரதநாட்டியம் இன்று உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்வதை அனைவரும் அறிவர். சிறப்பாக, புலம்பெயர்ந்த எமது பெற்றோர் தமது பிள்ளைகள் நடனத்தைக் கற்றுத்தேற அளித்து வரும் ஆதரவு வியக்கத்தக்கதும் பாராட்டுக்குரியதும்.

எனினும் இதனைக் கற்பதானது வெறுமனே அரங்கேற்றத்துடன் முடிந்து விடுவதாகவே பல காலம் காணப்பட்டது. இந்த நிலையை மாற்றி, அரங்கேற்றம் கண்ட பலரை நடன ஆசிரியர்களாகக் கனடாவில் உருவாக்கிச் சாதனை படைத்து நிற்பவர் கலைமன்ற நிறுவனரும் அதிபருமான திருமதி. நிறைஞ்சனா சந்துரு அவர்கள்.

புகலிட மண்ணில் முதன்முதலாக நடனத்துக்கெனத் தனியாக பரீட்சை முறைமையை உருவாக்கி, பல்கலைக்கழக தராதரத்துக்கு நிகராக தொடர்ச்சியாக பட்டமளிப்பு விழாவை நடத்திவரும் நிறைஞ்சனா அவர்கள் பல பரிசுகளையும் விருதுகளையும் தமதாக்கிக் கொண்டவர்.

இங்கு பட்டம் பெற்ற இளங்கலைஞர்கள் தமக்கென நடனக் கல்லூரிகளை ஆரம்பித்து, அதனூடாக ஓர் அமைப்பாக இயங்குவதும், வருடாந்தம் பொதுப்பணிக்கு நிதி சேகரிக்கும் நடன விழாவை நடத்தி வருவதும் முன்மாதிரியானது.

ஆரம்பத்திலிருந்து இப் பட்டமளிப்பு விழாவுக்குத் தலைமை தாங்குவதன் வழியாக இவர்களின் வளர்ச்சியையும் உயர்ச்சியையும் அருகிருந்து நோக்க முடிகிறது.

பட்டம் பெறும் நிருத்த நிறைஞர்களையும், அவர்களின் குரு நிறைஞ்சனா சந்துரு அவர்களையும் இவற்றுக்கெல்லாம் இணையாகவும் துணையாகவும் இயங்கிவரும் திரு. சந்துரு அவர்களையும், இத்தம்பதியரின் கலைப் புதல்விகள் மூவரையும் வாழ்த்திப் பாராட்டுகிறேன்.

திரு எஸ். திருச்செல்வம்
முதன்மை ஆசிரியர்
'தமிழர் தகவல்' - கனடா

Thiru S. Thiruchelvam

Editor in Chief, Tamils' Information

Best Wishes and Congratulations!

I am indeed delighted to send my best wishes to Canada Kalaimanram's eleventh year 'Niuththa Niraignar' Graduation ceremony.

Since 1992 Kalaimanram has been teaching Bharatha Natyam along with music and yoga to young students of all various nationalities.

The Diretor and teacher of Kalaimanram Mrs. Nirainchana Chantru is an excellent exponent of Tamil classical dance. It is very encouraging to see how Kalimanram is progressing under the able guidance of her in a short period.

I am proud to note that Kalaimanram being the first academy in Canada to prepare the students for teaching diploma in dance. It has made history now. It is real achievement.

I congratulate the Guru Nirainchana Chantru and all accomplished students who are graduating today. I wish the ceremony all success.

Thiru S. Thiruchelvam
Editor in Chief
Tamils' Information, Canada

Janak K. Khendry

'Khendry Dance Company'



KALAIMANRAM ACADEMY OF FINE ARTS AND YOGA

October 20 – 2015

It is a privilege to send my Good Wishes to Kalaimanram Academy of Fine Arts And Yoga and a few words of appreciation for Mrs. Nirainjana Chandru for running a very important art organization. I have known Mrs. Chandru for the last 14 years. I have always appreciated and admired the integrity and dedication she has for the dance and the dancers.

Kalaimanram presents very high caliber and authentic training in Bharatanatyam in practice and in theory. Year after year, the quality of the dance students is growing more exceptional. This is all happening because Mrs. Chandru has had excellent dance training herself from the most important gurus and she is imparting that knowledge to her students.

I have been the examiner for Kalaimanram for the last twelve years, and it is a pleasure for me to see many very good dancers graduating every year.

Mrs. Chandru has allowed several of her dancers to participate in numerous prominent dance creations of Janak Khendry Dance Company and travel abroad to several countries.

I SEND MY BLESSINGS TO ALL THE GRADUATING STUDENTS OF KALAIMANRAM ACADEMY OF FINE ARTS AND YOGA.

Janak K. Khendry
Artistic Director

JANAK KHENDRY DANCE COMPANY
436 Dufferin Street, Toronto, ON M6K 2A3.
416 – 530-2889
Email: dance@jkdanceco.org
Website: www.jkdanceco.org

JANAK KHENDRY DANCE COMPANY

Vina Kandavanam

Teacher, Poet, Writer



Best Wishes for a great Graduation Ceremony!

I feel very happy to send this message of best wishes to Kalaimanram's 11th Convocation Ceremony to be held on Sunday the 25th of October 2015.

Kalaimanram was first instituted in Sri Lanka 54 years ago jointly by Mrs. Thirupurasunthari's father Mr.W.M. Kumaraswamy and her famous Guru Padmasri Vazhuvoor Ramiapillai in Sri Lanka.

Mrs. Nirainjana Chandru who is a prominent disciple of Kalapooshanam Mrs. Thiripurasunthari, founded in 1992 the Kalaimanram Academy of Fine Arts and Yoga in Canada and began teaching Bharathanatyam. in five towns viz. Markham, Scaborough, Mississauga, Brampton and Ajax. She has succeeded in building the Kalaimanram into a model school in Canada which has within 22 years of its founding, successfully staged more than 60 Arangetrams.

Mrs Nirainjana Chandru is a reputed dancer, able choreographer and noble teacher and has the credit of being honoured by the Tamil public with many titles including Maanitha Mathangi. Her talents and experience as a dancer are recognized even by other Asian communities whose children have become her disciples.

Kalaimanram is the first dance school in Canada to prepare students towards a diploma in the teaching of Bharatanatyam and convocation for the first batch of successful candidates was held in 2005 and this year's ceremony becomes the 11th one.

I take this opportunity to congratulate the three students who have qualified for the title Niruththa Niranjar and all four students who have successfully completed their Teachers' Grade this year.

I also commend the teachers of Kalaimanram Academy of Fine Arts and Yoga, its noble Director Mrs. Nirainjana, her able husband Mr. Chandru for making our ancient art of Bharathanatyam flourish in this country. Compliments to the parents too, for encouraging their children to learn our traditional dance form.

May the Lord of dance, Nataraja, bless you all!

V. Kandavanam
President:
Hindu Religious Society of Ontario.

வி. கந்தவனம்

ஆசிரியர், கவிஞர், எழுத்தாளர்

விழா மிகவும் சிறப்பாக நடைபெற வாழ்த்துகின்றேன்!

இவ்வாண்டு அக்டோபர் மாதம் 25ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள கலைமன்றத்தின் பதினோராவது பட்டமளிப்பு விழாவுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கலைமன்றம் திருமதி நிறைஞ்சனா சந்துரு அவர்களின் குரு கலாபூஷணம் திரிபுரசுந்தரி யோகானந்தம் அவர்களின் தந்தையார் திருவாளர் W.M. குமாரசாமி அவர்களாலும் குரு பத்மஸ்ரீ வழுவூர் இராமையாபிள்ளை அவர்களாலும் 54 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழீழத்தில் முதன்முதலாகத் தொடங்கப்பெற்றது.

அதனை திருமதி நிறைஞ்சனா அவர்கள் 1992ஆம் ஆண்டு கனடாவிலும் ஆரம்பித்துப் பரதக் கலையை வளர்த்து வருகின்றார். தனது தனிப்பட்ட ஆர்வத்தாலும் துணைவர் திரு. சந்துரு அவர்களின் ஒத்துழைப்பாலும் பெற்றோரின் ஆதரவாலும் குருகுல முறையில் எமது கலைகளைக் கனடாவிற் கற்பித்து வரும் நிறைஞ்சனா அவர்கள் கடந்த 22 ஆண்டுகளில் 60க்கும் மேற்பட்ட அரங்கேற்றங்களை நடத்திச் சாதனையும் படைத்திருக்கின்றார்.

நிறைஞ்சனா அவர்கள் பரதக் கலையைக் கலாபூஷணம் திரிபுரசுந்தரி அவர்களிடம் முறையாகக் கற்று அவரது தலைமாணாக்கியாக விளங்கும் ஒரு வித்தகி; பல அரங்கங்களைக் கண்ட ஆற்றல் ஆடல்நங்கை; விவேகம் நிறைந்த நடன அமைப்பாளர்; தாய்மைக் குணந் தாங்கிய குருமகள்; மானிதமாதங்கி உட்பட்ட பல பட்டங்களைப் பெற்றவர்.

கனடாவில் மார்க்கம், ஸ்காபரோ, மிசிசாகா, பிராம்டன், ஏஜாக்ஸ் ஆகிய ஐந்து நகரங்களிற் பரதநாட்டிய வகுப்புகளை நடத்திவருகின்றார். நடனத்துக்குப் படிமுறையிற் பரீட்சைகளும் வைத்துச் சான்றிதழ்கள் வழங்கிவருகின்றார். இறுதிப் பரீட்சையில் வெற்றிபெற்று அரங்கேற்றம் கண்டவர்களுக்கு ‘நிருத்தநிறைஞர்’ என்ற பட்டத்தையும் சூட்டிவருகின்றார்.

கலைமன்றம் 1997ல் ஆசிரிய தராதரக் கற்கைநெறியை முதன்முறையாகக் கற்பிக்கத் தொடங்கியது. 2005முதல் ஆசிரிய தராதரச் சான்றிதழ்க் கற்கைநெறித் தேர்வில் சித்தி பெற்ற மாணவருக்குப் பட்டமளிப்பு விழாவையும் நடத்தத் தொடங்கியது.

இன்று கலைமன்றத்தின் 11ஆவது பட்டமளிப்பு விழா நடைபெறுவது அதன் தொடர்ச்சியான வளர்ச்சியையும் கனடாவில் பரதக்கலை பெற்றுவரும் மறுமலர்ச்சியையும் காட்டுவதாகவுள்ளது.

பரீட்சையிற் சித்திபெற்ற மூன்று நிருத்தநிறைஞர்களுக்கும் ஆசிரிய தராதரம் பெற்ற நான்கு வருங்கால பரதநாட்டிய ஆசிரியர்களுக்கும் பாடநெறியைப் படிப்பித்துவரும் கலைமன்றத்து ஆசிரியர்களுக்கும் தமது பிள்ளைகளைப் பரத நாட்டியத்துறையில் தொடர்ந்து ஈடுபடுத்திவரும் பெற்றோருக்கும் அதிபர் திருமதி நிறைஞ்சனா அவர்களுக்கும் அவரது அருமைத் துணைவர் திரு. சந்துரு அவர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய பட்டமளிப்பு விழா திட்டமிடப்பட்டவாறு முட்டின்றி நடைபெற எல்லாம் வல்ல நடராசப்பெருமானை வணங்கி வாழ்த்துகின்றேன்.

வி. கந்தவனம்
தலைவர்:
இந்துசமயப் பேரவை, ஒன்ராறியோ.

Prof. E. Balasundaram

Professor, Poet, Writer



A message from Prof. E. Balasundaram, Ph.D.

I have great pleasure in sending this Greeting Message to Smt. Nirainjana Chanthuru's Niruththa Niraignars 11th year Graduation ceremony on October 25th, 2015.

Bharata Natyam is one of the most subtle, sophisticated, and graceful forms of classical dance in the world. Bharata Natyam had been the mother art for most of the other classical dance systems of India. This Indian classical dance continued to play an important part in the lives of the people and in the later periods it was so closely connected with Hindu religion. Now, Bharatham has more and more cultural values and, it is an essential social accomplishment which everyone is flocking to acquire. Tamils may be proud of the fact the Bharata Natyam, has now become immensely popular not only in its homeland but also all over the world, due to its own intrinsic worth, vitality and esthetic values.

In the history of Bharatha Natyam, especially in Canada, Smt. Nirainjana Chanthru's contributions should be recorded. The teacher is widely respected as a Dance Teacher, Choreographer and Artistic Director in Dance in GTA. Her contribution to the art form speaks volumes. Smt. Nirainjana is the founder and director of the Kalaimanram - Academy of Fine Arts and Yoga. I am honoured to be associated with her dance school, which has been promoting Bharatha Natyam over 20 years in Canada. Her dance school is committed to actively training the progressing group of dedicated students in GTA. She conducted dance classes and has given several dance programs for the community and community based fund raising dance programs. She has produced several young dance teachers. I wish the teacher Smt. Nirainjana to continue her services in Canada for our community in the ways of multi cultural diversity.

Today we all witnessed her students' 11th Graduation ceremony. There is no doubt that this ceremony will be another memorable and successful event that will remind us our rich and vibrant culture. In the field of Fine Arts in Toronto, Nirainjana Chanthru will be remembered as the handful of people who despite all odds succeeded in promoting great cultural heritage of Tamils.

My Congratulations for the Niruththa Niraignar who receive their Diploma Certificate at this 11th Graduation Ceremony. I pray that this Graduation ceremony will be glittered with blessing and divinity.

Prof. E. Balasundaram,

Annamalai University Canada Campus.
October 25th, 2015.

த. சிவபாலு

ஆசிரியர், கட்டுரையாளர்



கலைமன்றத்தின் நடனக்கலை வல்லாருக்கான பட்டமளிப்பு விழா மாண்புற வாழ்த்துகின்றேன்!

நடனக்கலை எப்போது தொடங்கியது என்பதற்கான "திட்டவட்டமான வரையறை" இதுவரை அறுதியிட்டுக் கூறப்படவில்லை. மனிதன் தோன்றிய காலம் தொட்டே நடனக்கலை மக்களிடையே இடம் பெறத்தொடங்கிவிட்டது என்னும் முடிவுக்கு பல ஆய்வாளர்கள் வருகின்றனர். கலைக் களஞ்சியம் நடனக்கலைபற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. "கலைகள் யாவற்றிற்கும் அடிப்படையாகவும் ஆதியாகவும் உள்ளது ஆடற்கலை-உள்ளத்தில் உண்டாகும் உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் உடற்கூறுகள் வாயிலாக புறத்தார்க்குப் புலப்படுத்துவதே இக்கலையின் நோக்கமாகும். 'லயம்' என்பது இயற்கையின் இயல்பான விளைவு, இது கற்பனையால் ஆக்கப்பட்ட மகிழ்ச்சியின் தோற்றமாகும். மனிதன் உலகில் தோன்றிய காலம் முதல் தன் மன இன்பத்தை நடனத்தால் வெளிப்படுத்தி வைத்திருப்பதை நாமறிவோம். உலகில் நடனமாடாத இடமும் இல்லை, நடன மாடாத மக்களும் இல்லை" (கலைக்களஞ்சியம் VI – 1959)

நடனக் கலைபற்றி நாட்டியசாஸ்திரத்தில் "உலகம் மிகமோசமான ஆசை, விருப்பு, குரோதம், விரோதம், பகை, பொறாண்மை, கோபம், இன்பமும் துன்பமும் கொண்ட ஒன்றாக மாறியவேளை பிரமாவிடம் தேவர்கள் மன அமைதி தரத்தக்கதும் இன்பம் தரத்தக்கதானதுமான நடனக் கலையை ஆக்கித் தரவேண்டும் என வேண்டினர். மக்கள் எல்லோராலும் எழுத்துருவில் அறிந்து, கற்றுக் கொள்வதற்கும் சந்தேகத்துக்கு அப்பாற்பட்டதாகவும், எல்லோராலும் இன்புறக் கூடியதாகவும் பார்க்கக்கூடியதும் கேட்கக்கூடியதுமானதொரு மனமகிழ்வைத் தருகின்றதான ஒரு கலையை ஆக்கித்தரவேண்டும், என பிரமனிடம் இரந்து வேண்டிக்கொண்டனர்" இதற்கமைய பிரம்மா "இந்தக் கலை வெறுமனே உங்களது இன்பத்திற்காக அல்ல, ஆனால் புனித கலைத்துவ (பாவம், இராபம், தானம்) வெளிப்பாடு எல்லா உலகங்களுக்கு மகிழ்வைத் தருவது ஆகும். இந்தக் கலை உலகிலுள்ள வேலையும் விளையாட்டும், போராட்டமும் படுகொலைகளும் இடம்பெறும் உலகியல் இடர்பாடுகளிடையே பண்பாட்டையும், மன அமைதியையும், உடலாரோக்கியத்தையும் பேணிக்காக்க வல்ல கலையாக இக்கலை மனச்சாட்சியைப் பேணுவோரது சரியான அறுவடை, உண்மைக்குப் புறம்பானவற்றைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது போன்ற கல்விக் கோட்பாட்டை முதன்மைப் படுத்துகின்றது. கொள்கைகள், கோட்பாடுகளைப் பின்பற்றுவோரின் மாணாக்கர்கள், உதாசீனமானவர்களிடையே மெய்யறிவை ஏற்படுத்திவிட, மெய்ஞானிகளிடையே கற்றறிய, அரசர்களுக்கு விளையாட்டுக்களில் பொறுப்பேற்க, துக்க சாகரத்தைத் தாங்கிக்கொள்ள, இந்தக் கலை வளம் நிறைந்த பல்வகை மன நிலைமைகள், ஆத்மாவின் பல்வேறுபட்ட உணர்ச்சிகள், மனிதப்பண்பியலின் தொடர்புகள், ஈடுபாடுகள் - மேலாக, இடைப்பட்டதற்கும் கீழானவற்றை நீக்கிவிடவும் - பொழுதுபோக்குப் போன்ற எல்லாவற்றிற்கும் மிகச் சிறந்த அறிவுரையுமாகும்" எனக்குறிப்பிடுகின்றது.

பரத நாட்டிய காலத்திற்கு முன்பே நடனக் கலை தமிழர்கள் மத்தியில் இடம்பெற்றிருக்கின்றது' எடுத்துக் கூறுகின்றது. மாதவி நடனத்தை 'நாட்டிய நன்நூலை' கற்றுக்கொண்டாள் என அரங்கேற்றுக் காதையில் குறிப்பிடப்பட்டுள்ளதை நோக்கும்போது மனிதனின் வாழ்வோடு பரதக் கலை ஒன்றி வளர்ந்து வந்துள்ளமை வெளிப்படை. 'அவிநயம்' என்னும் தமிழ் நாட்டிய நூலை அவிநயர் எழுதியுள்ளார். 'அவிநயம்' தொல்காப்பியர் காலத்து நூலாகும் அது இன்று கிடைத்திலது. எனினும் அந் நூல் தமிழியல் பற்றியும் நடனக்கலை பற்றியும் எழுந்த நூல் என்பதில் ஐயமில்லை. கூத்தர், விறலியர், கோதியர், வைரியர், பாணர் போன்ற குழுவினர் நடனக்கலையில் வல்லவர்களாகச் சங்ககாலத்தில் திகழ்ந்துள்ளனர். சங்ககாலத்தில் சதானர் 'நாடகத் தமிழ்' என்பன அவிநயரின் 'நாட்டிய நன்நூலை' தொடர்ந்து எழுந்த நாட்டியம் பற்றிய தமிழ் நூல்களாகக் காணப்படுகின்றன.

"தொல்காப்பியர் காலத்தவரான அவிநயர், அகத்தியரின் சீடர்கள் பன்னிருவரில் ஒருவராக் கொள்ளப்படுகின்றார். ஆனால் பரதமுனிவரோ பல்லவர் ஆட்சிக்காலமான 4ம் அல்லது 5ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். அவருக்கு முன்னரே அவிநயர் நாட்டிய நன்நூலைப் படைத்துள்ளார். பரதத்தின் வரலாறும் அதனோடு ஒட்டிய நாட்டிய வரலாறும் பல்வேறு படையெடுப்புக்களால் நலிந்துபோயிருந்தது. அதனைப் புதுமெருகூட்டி தமிழருக்குப் பெருமை சேர்த்தவர்களுள் வழுவூர் இராமையா பிள்ளை அவர்களின் பெரு முயற்சியால் தஞ்சாவூரில் அடித்தளமிடப்பட்டுப் புதுமெருகூட்டப்பட்டு வந்துள்ளது. வழுவூரார் என பெருமையுற அழைக்கப்படும் அந்த நடன வல்லானின் வழித்தோன்றலாக இன்று கனடாவில் கலைமன்றத்தை அமைத்து நூற்றுக்கணக்கான மாணவர்களைப் பயிற்றுவித்து வரும் ஸ்ரீமதி நிறைஞ்சனா சந்துரு அவர்களின் பணி தமிழ்கூறும் நல்லுலகம் என்றும் ஏற்றிப் போற்றும் திறன் கொண்டது. தனது மாணவ மணிகளைக் கற்றுத் தேற வழிகாட்டியாக விளங்கி ஆண்டுதோறும் நடன ஆசிரிய தரத்தை எய்துகின்ற நடன வல்லாருக்குப் பட்டமளிப்பு விழாக் கண்டு கௌரவப்படுத்துவது பெருமை தரும் விடயம் ஆகும்.

கனடிய மண்ணில் பரதக் கலை பாங்குறப் பார்வையாளர்களையும் பரதக்கலையைப் பயில்வோரையும் மனமகிழ் வெய்து பயனடைய கலைமன்றத்தின் தாபகரும் அதிபருமான ஸ்ரீமதி நிறைஞ்சனா சந்துரு மேற்கொண்டு வரும் இப்பணி தொடர வாழ்த்துவதோடு, இன்றைய பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்றுக்கொள்ளும் மாணவ மணிகளையும் வாழ்த்துகின்றேன்.

நன்றி

த. சிவபாலு
முன்னாள் பாடசாலைக் கொத்தணி அதிபர்
15.10.2015

Navam K. Navaratnam

Writer, Journalist, Poet, Dramatist



My heartiest congratulations...

Although Bharathanatyam is imbued with joy, joy of enjoyment, sensual, vibrant, and vividly expressive, it is also a means of communication between body and soul to express what is too deep to find for words. It touches you, moves you, and makes you think; it reveals your history; it puts you back in touch with your roots; it harmonizes, heals, and reaffirms the existence of beauty and truth.

However, Bharathanatyam cannot be enforced on the students. It is only real when it comes from the heart and soul of the dancer. There are a few key aspects of Bharathanatyam that the students must acquire before they truly begin to express themselves from the heart. The dancers are taught these key aspects by none other than their teacher.

Having this in mind, Smt. Nirainjana Chanadru, the Founder, Director, Principal, and Teacher of Kalimanram, the Academy of Fine Arts and Yoga, has chosen to be a part of such a beautiful form of art, and taken the right path to have this 'Poetry in Motion' as her pulse, heartbeat, breath, and rhythm of her life.

Smt. Nirainjana Chanadru, a well reputed Choreographer with highly commendable academic credentials and experience has been working so hard for the past 22 years, together with the ardent support of her husband Mr. Chandru, to establish such an outstanding institution that has already produced more than 50 graduates and 22 qualified teachers in the field of Bharathanatyam.

Smt. Nirainjana Chanadru has dedicated her time, not only to teach her students the complex techniques of Bharatham, but to help them develop those vital components which have moulded them into the dancers of today's world. She has been an excellent guru who can groom every creation, who can enhance every administration and who can be one of true inspiration to her students. Her diligence, discipline, dedication, and determination have certainly paid off!

On this 11th Convocation Ceremony of Kalaimanram, my heartiest congratulations and best wishes go to all the students who are qualified for the title 'Niruththa Niraignar,' and for the 'Teachers' Grade Diploma' this year, the Director Smt. Nirainjana Chanadru, her husband Mr. Chandru, their children, teachers and everyone else for their efforts in promoting this divine art of Bhrathanatyam!

Navam K. Navaratnam
B.A. (Hons); M.Sc. (Agric. Econ.)
Accreditation Specialist (Rtrd)
Writer, Journalist, Poet, Dramatist & Translator

குரு அரவிந்தன்

எழுத்தாளர், ஆசிரியர், கட்டுரையாளர்



குரு அரவிந்தனின் வாழ்த்துச் செய்தி

11வது பட்டமளிப்பு விழாவை இன்று மிகவும் சிறப்பாகக் கொண்டாடும் கலைமன்றத்திற்கு முதற்கண் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

கலைமன்றத்தின் அதிபராக இருக்கும் ஸ்ரீமதி நிறைஞ்சனா சந்துரு அவர்களைத் தெரியாதவர்களே கலையுலகில் இருக்க முடியாது. அவர் இன்று புகழ் பெற்ற நடன ஆசிரியையாகக் கனடாவில் திகழ்வது யாவரும் அறிந்ததே. நடனக்கலையில் திறமை மிக்க ஆசிரியர்களை உருவாக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையோடு புலம் பெயர்ந்த மண்ணில் ஸ்ரீமதி நிறைஞ்சனா சந்துரு அவர்களால் 1992ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது தான் இந்தக் கலைமன்றம். இன்று பட்டமளிப்பு விழா நடத்தும் இந்தக் கலைமன்றம் என்ற இந்த விருட்சம், பல திசைகளிலும் கிளைகளைப் பரப்பிக் கம்பீரமாக நிமிர்ந்து நிற்பதைப் பார்க்க, எனக்கு மட்டுமல்ல தமிழ் சமுதாயத்திற்கே பெருமையாக இருக்கின்றது.

இதுவரை பல நிருத்த நிறைஞர்களையும், ஆசிரியர்தர டிப்ளோமா பட்டதாரிகளையும் உருவாக்கி இந்த மண்ணிலே எங்கள் இனத்திற்குப் புகழ் தேடித்தந்த பெருமை ஸ்ரீமதி நிறைஞ்சனா சந்துரு அவர்களையே சாரும். கலையார்வம் கொண்ட ஸ்ரீமதி நிறைஞ்சனா, அவரது கணவர் திரு. சந்துரு அவர்களதும், அவரது பிள்ளைகளினதும் ஈடுபாடும், ஒத்துழைப்பும் இந்தக் கலைமன்றத்தின் வளர்ச்சிக்கு மேலும் உரம் சேர்க்கின்றன என்பதை நாம் கண்கூடாகக் காண முடிகின்றது. கலைமன்றத்தின் அயராத உழைப்பை இன்று பட்டம் பெற்று நடன ஆசிரியர்களாகப் போகும் அடுத்த தலைமுறையினரான இவர்களின் வடிவில் இங்கே காணமுடிகிறது.

இன்று கலைமன்றத்தால் பட்டம் பெறும் ஆசிரியர்களுக்கும், நிருத்த நிறைஞர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள் உரித்தாகுக. எமது பண்பாடு, கலை, கலாச்சாரம் போன்றவற்றை புலம் பெயர்ந்த இந்த மண்ணில் பேணிக்காக்கும் ஸ்ரீமதி நிறைஞ்சனா சந்துரு அவர்களையும், அவருக்குத் துணையாக நின்றுழைக்கும் ஆசிரியர்களையும், முக்கியமாக இந்த மண்ணில் கலை வளர்ப்பதற்கு உறுதுணையாக நிற்கும் மாணவ, மாணவிகளின் பெற்றோர்களையும் மனதாரப் பாராட்டுகின்றேன். கலைமன்றம் இதுபோலப் பெயரும் புகழும் பெற்று, அடுத்த தலைமுறையினரின் பங்களிப்போடு மேலும் வளர்ச்சி காணவேண்டும், எங்கள் பண்பாடு கலாச்சாரத்தை மட்டுமல்ல, எங்கள் தமிழ் மொழியையும் பாதுகாக்க வேண்டும் என்று வேண்டி வாழ்த்துகின்றேன்.

குரு அரவிந்தன்
எழுத்தாளர், ஆசிரியர், கணக்காளர்.
காப்பாளர்: ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கம்.
25-10-2015



'நிருத்த நிறைஞர்'

NIRUTHTHA NIRAIGNAR

2014-2015

செல்வி. அபிநயா சந்துரு
'நிருத்த நிறைஞர்'



கலைமன்றம் நிகழ்த்தும் பதினோராவது பட்டமளிப்பு விழாவில், செல்வி அபிநயா சந்துருவை அறிமுகம் செய்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அபிநயா தனது நான்கு வயதிலிருந்தே சங்கீத வித்வான் ஸ்ரீமதி தனதேவி மித்திரதேவாவிடமிருந்து வயலின், வாய்ப்பாட்டு கர்நாடக சங்கீதத்தைக் கற்றுவருகிறார். அக்காலம் தொட்டே, தமது தாயார் ஸ்ரீமதி நிறைஞ்சனாவிடமிருந்து பரதநாட்டியம் பயில ஆரம்பித்தார். அண்மையில் ஆசிரியதர டிப்ளோமா பரீட்சையில் சித்தியடைந்த அவர், இவ்வாண்டு ஜூலை 31இல் தமது சகோதரியுடன் இணைந்து, பரதநாட்டிய அரங்கேற்றத்தை நிகழ்த்தினார்.

பியெர் எல்லியெற் ட்ரூடோ உயர்தர பாடசாலையில் 12ஆம் வகுப்பில் சிறப்பு மாணவியாகக் கல்வி கற்றுவரும் அபிநயா, பல்கலைக்கழகத்தில் வணிகமும் சட்டமும் சார்ந்த கல்வியைத் தொடர எண்ணியிருக்கிறார். பல இலாப நோக்கற்ற அமைப்புக்களில் தொடர்ந்து தன்னார்வத் தொண்டுகளில் ஈடுபட்டுவரும் இவர், சமூகத்தின் ஒரு துடிப்பான பங்களிப்பாளர். அபிநயா தமது குழுவின் முன்னணி 'ற்ரம்பெற்' இசைக் கலைஞராவார். பிரதேச, தேசிய அடிப்படைகளில் நடத்தப்படும் இந்த இசைக்கருவி மீட்டும் போட்டிகளில் கிரமமாகப் பங்குகொண்டு, அடுத்தடுத்து மூன்று தடவைகள் தங்கப் பதக்கப் பரிசில்களைப் பெற்றிருக்கின்றார். கர்நாடக சங்கீதப் பாடகர்களுக்கு மட்டுமன்றி, பல உள்ளூர் மாகாண விழாக்களில் பின்னணிப் பாடகர்களுக்கும் இவர் வயலின் வாசித்து வருகின்றார்.

கலைமன்றத்தால் நடத்தப்படும் பரதநாட்டிய ஆசிரியதர டிப்ளோமா பரீட்சைக்கென அபிநயா சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரையை மதிப்பீடு செய்யும் சிறப்புரிமையும் கௌரவமும் எனக்குக் கிடைத்திருந்தது. 'கலைகளுக்குப் பின்னாலான அறிவியல்' என்பதனைத் தமது ஆய்வுக் கட்டுரைக்கான தலையங்கமாக அவர் துணிச்சலுடன் தெரிவு செய்திருந்தார். பல்வேறு கலைகள் பற்றிய பரந்த அறிவினை வேண்டிநிற்கும் ஒரு விரிவான தலைப்பு அது. பலதரப்பட்ட கலை வடிவங்களின் அறிவியல் முக்கியத்துவங்களை உறுதிப்படுத்தும் வகையிலான தமது கருத்துக்களை வெற்றிகரமாக முன்வைத்திருந்தார். அவரது அணுகுமுறைகள் அறிவியல் ரீதியானவை, வாதமுறைகள் தர்க்க ரீதியானவை. அவரது கட்டுரையை நன்கு அனுபவித்து வாசித்த எனக்கு, அது ஒரு குறிப்பிடத் தகுந்த ஆய்வுப்பணி எனப் பரிந்துரைப்பதில் எவ்வித தயக்கமும் இருக்கவில்லை.

மேலும், 2013 ஒக்டோபரில் இடம்பெற்ற மனவெளி கலையாற்றுக் குழுவினரின் அரங்காடல் நாடக விழாவுக்கென நான் நெறிப்படுத்திய நாடகமொன்றில், இவரது சகோதரி ஐஸ்வர்யாவின் நடன அமைப்பின்கீழ் பங்குகொண்ட கலைமன்ற மாணவிகள் குழுவில் ஒருவராயிருந்த அபிநயாவின் நடன ஆற்றல்களைப் பயன்படுத்தும் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்தது. அபிநயா மிகுந்த திறமையும், வினயமும், இங்கிதமான பண்பும் மிக்க ஒரு இளம் நங்கை என்பது எனது சொந்த அனுபவமாகும். அவரது தனிப்பட்ட நேர்மையும் பொறுப்புணர்வும் உன்னதமானவை.

அபிநயா தமது ஆசிரியதர டிப்ளோமாவையும் 'நிருத்த நிறைஞர்' பட்டத்தினையும் வெற்றிகரமாகக் கிடைக்கப் பெற்றிருக்கின்றமை குறித்து, நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். அபிநயா, உங்களை மிகவும் பாராட்டி, வாழ்த்துகிறேன்! உங்கள் கனவுகள் மெய்ப்படக் காரணமான உங்கள் பெற்றோரைப் பாராட்டி, தலை வணங்குகிறேன்!

நவம் க. நவரத்தினம்
பி.ஏ (சிறப்பு) எம்.எஸ்ஸி. (விவசாயப் பொருளியல்)
ஓய்வுபெற்ற தகமைச்சான்று வல்லுனர்
எழுத்தாளர், இதழியலாளர், கவிஞர், நாடகர், மொழிபெயர்ப்பாளர்

Miss. **Abhinayaa Chandru**

'Niruththa Niraignar'



I have great pleasure in introducing Miss. Abhinayaa Chandru at the 11th Convocation Ceremony of Kalaimanram.

Abhinayaa has been learning Carnatic violin and vocal since the age of four under the tutelage of Sangeetha Vidwan Smt. Thanathevy Mithratheva. Simultaneously, she started learning Bharathanatyam from her mother, Smt. Nirainjana Chandru. She was successful in her Teachers' Grade Diploma Examination in Bharathanatyam and recently completed her Arangetram alongside with her sister on July 31st this year.

Abhinayaa is one of the lead trumpet players in her band and regularly competes at regional and national competitions organized by Ontario Band Association and MusicFest Canada, placing gold for three consecutive years. Not only does Abhinayaa play violin accompaniment for Carnatic singers, she also has started to play for playback singers at many local and provincial festivals.

Abhinayaa is a grade 12 honours student at Pierre Elliot Trudeau high school and looks forward to furthering her education in Business and Law at the university. She is an active contributor in her community, regularly volunteering at various non-profit organizations such as Scouts Canada and the Unionville Home Society Program.

I had the privilege and honour of assessing the dissertation submitted by Abhinayaa for her Teachers' Grade Diploma Examination in Bharathanatyam conducted by Kalaimanram.

Abinayaa had courageously chosen to write her dissertation on 'The Science behind the Arts,' a vast topic that requires enormous knowledge in various forms of Art. And of course, she had successfully presented her facts to validate the scientific significance of quite a number of Art forms. Her approaches were scientific and her arguments were logical. I enjoyed reading her research article and had no hesitation in recommending it as a remarkable piece of research work.

Moreover, I had the rare opportunity of utilizing Abhinayaa's dancing abilities in a group of students of Kalaimanram lead by her sister Ishwaria for a play which I directed for Manaveli's 16th Festival of Theatre and Dance - Arangadal in October 2013. It's my personal observation that Abhinayaa is a very talented, affable young lady with pleasing manners. Her personal integrity and sense of responsibility are of very high caliber.

I am extremely happy that Abhinayaa has successfully obtained her Teachers' Grade Diploma and the title 'Niruththa Niraignar.' Congratulations and best wishes to you, Abhinayaa and hats off to your parents for being instrumental in making your dreams come true!

Navam K. Navaratnam
B.A. (Hons); M.Sc. (Agric. Econ.)
Accreditation Specialist (Rtrd)
Writer, Journalist, Poet, Dramatist & Translator

செல்வி. அபர்னா செல்வராசா

'நிருத்த நிறைஞர்'



அபர்னாவின் நடன அரங்கேற்றத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும்படி என்னிடம் அபர்னாவின் குருவான ஸ்ரீமதி நிறைஞ்சனா சந்துரு அவர்களும், அபர்னாவின் பெற்றோர்களான திரு. திருமதி செல்வராசா அவர்களும் அன்புடன் அழைத்திருந்ததால் எனக்கும் அபர்னாவின் அரங்கேற்றத்தில் கலந்து கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்திருந்தது. ரொறன்ரோவில் உள்ள றிச்மன்கில் அரங்கத்தில் (Richmond Hill Centre for the Performing Arts) யூலை மாதம் 24 ஆம் திகதி நடைபெற்ற அபர்னாவின் நடன அரங்கேற்றத்தில் எனது மனைவியும் நானும் கலந்து கொண்டு அபர்னாவின் நாட்டியத் திறமையைப் பாராட்டியிருந்தோம்.

கலைமன்றத்தின் 11 வது பட்டமளிப்பு விழாவான இன்று மீண்டும் அபர்னாவைப் பாராட்ட எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. ஒன்ராறியோ தமிழ் ஆசிரியர் சங்கத்தின் தலைவராக நான் கடமையாற்றிய போது அபர்னாவின் குடும்பத்தினருடன் பழகுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. மதிப்புக்குரிய ஸ்ரீமதி நிறைஞ்சனா சந்துருவின் மாணவிதான் அபர்னா என்பதை அறிந்தபோது மிகவும் பெருமைப்பட்டேன். பரதநாட்டிய உலகில் அறிமுகமே தேவையில்லா இவரின் குருவான ஸ்ரீமதி நிறைஞ்சனா சந்துருவைப் பற்றி நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. திறமை மிக்க நடன ஆசிரியர்களை உருவாக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையோடு செயல்படுபவர் ஸ்ரீமதி நிறைஞ்சனா சந்துரு அவர்கள். 1992ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 'கலைமன்றம்' என்ற இந்த விருட்சம், இன்று பல திசைகளிலும் கிளைகளைப் பரப்பிக் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றது. இதன் மூலம் இதுவரை பல நிருத்த நிறைஞர்களையும், ஆசிரியர்தர பட்டதாரிகளையும், கலைமன்றத்தின் அதிபர் ஸ்ரீமதி நிறைஞ்சனா சந்துரு அவர்கள் உருவாக்கி இந்த மண்ணில் எங்கள் இனத்திற்குப் புகழ் தேடித் தந்திருக்கின்றார்.

செல்வி அபர்னா ஐந்து வயதில் இருந்தே ஆடற்கலையைக் கற்றவர். தனது விடா முயற்சியால் ஆசிரியத் தரத்தில் சித்திபெற்ற இவர் இன்றைய கதாநாயகிகளில் ஒருவராக நிருத்த நிறைஞர் தகுதியையும் பெறுகின்றார். பல்கலைக்கழக மாணவியான செல்வி அபர்னா, தாய் மொழியாம் தமிழ் மொழியில் மிகவும் பற்றும், திறமையும் கொண்டவர். நாட்டிய ஆசிரிய தராதரப் பரீட்சைக்காக அபர்னா Bharathanatyam – Arts within a True Divine Art என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக்கட்டுரை ஒன்றையும் எழுதியுள்ளார். இக்கட்டுரையில் பரதநாட்டியக் கலையின் தெய்வத்தன்மை பற்றி மிகவும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றார்.

இச்சந்தர்ப்பத்தில் நிருத்த நிறைஞர் பட்டம் பெறும் செல்வி அபர்னா செல்வராசாவையும் ஏனைய நாட்டிய தாரகைகளையும் எதிர்காலத்தில் எல்லா நலனும் பெற்று, சிறந்த நாட்டிய தாரகைகளாகத் திகழவேண்டும் என்று பாராட்டி வாழ்த்துகின்றேன்.

இவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்த ஸ்ரீமதி நிறைஞ்சனா சந்துரு அவர்களையும், ஆசிரியர்களையும், பெற்றோர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

குரு அரவிந்தன்
எழுத்தாளர், கணக்காளர், ஆசிரியர்
உபதலைவர்: கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்
காப்பாளர்: ஒன்ராரியோ தமிழ் ஆசிரியர் சங்கம்.
25-10-2015

Miss. Abarna Selvarajah

'Niruththa Niraignar'



First, I would like to congratulate Abarna Selvarajah for her outstanding performance at her Arangetram on Friday July 24th 2015. It is my pleasure to introduce this talented Bharathanatya student Miss. Abarna Selvarajah to mark her 'Niruththa Niraignar' graduation ceremony organized by the Kalaimanram of Fine Arts and Yoga.

I would like to take some time today to briefly speak about Abarna's recent achievements and interests. Abarna has been enrolled at Kalaimanram and actively involved with dance for the past 12 years. She recently passed the teacher's grade examination under Kalaimanram – academy for Fine Arts and Yoga. She was recently awarded the Nirutha Nirainger title. She has also participated in various dance programs through Kalaimanram such as FeTNA.

She recently completed her High School diploma and I.B. program at Turner Fenton Secondary school. While at Turner, she also finished the International Languages program in Tamil, earning 3 high-school credits up to the date. During high school Abarna also received many awards, including the Principal Reception as well as Honour Roll every year. In September began attendance at the University of Ottawa to obtain a Joint Honors bachelor degree in Political Science and History. She is also still continuing Baranatyanam while in Ottawa.

Outside of academics, Abarna was volunteering part-time with her local elementary school's Kindergarten class. Last year she was on the executive team of SOAR, a conference designed to help middle schoolers better accommodate themselves into high school. Two years ago, she served on the Student Council at her high-school and also attended multiple leadership conferences, such as Count Me In, IMPACT, and START. In the future, Abarna would like to work for the United Nations to combat international poverty related issues, and further her dance career as the end of her Arangetram is only the beginning of her dance journey.

I wish 'Nirutha Niraingnar' Abarna all the best in her future journeys, and look forward to the next stage of her dance career. Her Guru Smt. Nirainjana Chanthuru and her parents Mr. and Mrs. Selvarajah deserve my thanks as they have been instrumental in passing on our traditions onto the next generation.

Thank You.

Kuru Aravinthan
Writer, Teacher, Accountant.
V.P: Canada Tamil Writers Association.
Patron: Ontario Tamil Teachers Association.

செல்வி. பிரிந்திகா விஜயரத்தினம்

'நிருத்த நிறைஞர்'



செல்வி பிரிந்திகா, திரு. விஜயரத்தினம் திருமதி விஜயலதா விஜயரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளாவர். ஏழு வயதில் கனடா கலைமன்றத்திற் சேர்ந்து அதன் அதிபர் 'மானிதமாதங்கி' திருமதி நிறைஞ்சனா சந்துரு அவர்களிடம் ஆர்வத்துடன் பரதநாட்டியத்தைக் கற்றவர். தமது பதினெட்டாவது வயதில் 17. 07. 2015 வெள்ளிக்கிழமை இரிச்மண்ட் ஹில் கலையரங்கத்தில் அரங்கேற்றம் செய்து அசத்தியவர்.

அரங்கேற்றத்துக்கு எனது துணைவியாருடன் என்னையும் பிரதமவிருந்தினராக அழைத்தமைக்கு திரு. விஜயரத்தினம் குடும்பத்தினருக்கும் குரு நிறைஞ்சனா அவர்களுக்கும் எனது நன்றியை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். அரங்கேற்றம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. குருவும் பின்னணிக் கலைஞர்களும் பார்வையாளரும் மிகவே மகிழ்ந்து பாராட்டும்படியாகப் பிரிந்திகா பீடுற நடனம் ஆடினார். தமிழர் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் பரதக் கலையைக் கற்கும் வாய்ப்பினை அளித்த பெற்றோருக்கும் அதனைச் செவ்வனே கற்பித்து ஒரு தகைமையான நடன நங்கையாகத் தன்னை உருவாக்கிய குரு திருமதி நிறைஞ்சனா அவர்களுக்கும் பிரிந்திகா மிக நன்றியுள்ளவராக இருக்கின்றார்.

கலைமன்றத்தின் ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சைக்குப் பிரிந்திகா எழுதிய பரதநாட்டியமும் வருங்காலமும் என்ற ஆய்வுக் கட்டுரையை மதிப்பீடு செய்யும்வண்ணம் குரு நிறைஞ்சனா அவர்கள் பிரிந்திகாவை என்னிடம் அனுப்பியிருந்தார். கட்டுரை சிறப்பாக எழுதப்பட்டிருந்தது. கருத்துக்கள் பொருத்தமான பல படங்களுடன் விளக்கப்பட்டிருந்தது.

பிரிந்திகா தமிழ்மொழியையும் அழகாகப் பேசுகின்றார். பிராம்டன் அறிவகத்துப் பாலர்களுக்குத் தமிழ் ஆசிரியராகவும் இருந்திருக்கின்றார் என்பதைக்கேட்டு மகிழ்ச்சியுற்றேன். தமிழ் தெரியாத இங்குள்ள நடனநங்கையரை பிரிந்திகாவைப் பின்பற்றித் தமிழைப் பேசவும் எழுதவும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிரிந்திகா இப்பொழுது வில்பிறெட் லோறியர் பல்கலைக்கழகத்தில் B.Sc. பட்டம் படித்துவருகின்றார். பாரதியார் பாடிய ஒரு புதுமைப்பெண்ணாகவே நான் பிரிந்திகாவைக் காண்கிறேன். நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் நினைத்ததைச் சாதிக்கும் முனைப்பும் இவரது தனித்தன்மைகள். இத்தகைய முன்மாதிரியான இயல்புகள் பலவற்றைக்கொண்ட பிரிந்திகாவின் எதிர்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துவோமாக!

வி. கந்தவனம்
தலைவர்: இந்து சமயப் பேரவை

Miss. **Pirinthika Vijayaratnam**

'Niruththa Niraignar'



Miss Printhika, beloved daughter of Mr. Vijayaratnam and his better half Vijayalatha, began learning Bharathanatyam when she was seven years old from the dance maestro Mrs. Nirainjana Chandru at her popular Kalaimanram Academy of Fine Arts and Yoga. She continued to study the ancient art and had her arangetram at the age of eighteen on 17.07.2015 at Richmond Hill Centre for the Performing Arts.

I would like to take this opportunity to the Vijayaratnam family and Guru Mrs. Nirainjana Chandru for inviting my wife and me to this arangetram as the chief guests. It was indeed a well-organized Arangetram and Pirinthika performed extremely well to the satisfaction of her Guru, the Orchestra and the audience.

She is very grateful to her parents for encouraging her to embrace this divine and to her Guru for inspiring and guiding her to learn the unique Tamil culture through Bharathanatyam and to become a qualified dancer.

Guru Nirainjana referred Miss Pirinthika Vijayaratnam to me for assessing her dissertation written for her Kalaimanram Teachers' Grade Examination. I went through Pirinthika's dissertation entitled, 'Bharathanatyam and its Future' and found it to be of acceptable standard. I was really impressed by her method of survey and its results. It was very clear that she had made serious effort to prepare the dissertation, which was illustrated with appropriate pictures.

Apart from her dance performance, her fluent Tamil also impressed me. I understand that she had been Teaching Tamil to JK and SK children at Arivagam in Brampton. If there are Niruththa Niraignars on the stage waiting to receive diploma in the teaching of Bharathanatyam who are not fluent in their mother tongue Tamil, I request them to emulsify Pirinthika.

She is now at Wilfred Laurier University doing Geography Honours with Environmental Science for B.Sc. degree.

I am confident that Pirinthika, popularly known as Priya Vijay, has received sufficient training at Kalaimanram Academy of Fine Arts and Yoga to serve our community well as a dancer and to face the challenging future with courage and confidence.

I wish her well.

V. Kandavanam
President:
Hindu Religious Society of Ontario

Kalaimanram
Assistant Teachers

'Niruththa Niraignar' **Kavita Pathinathar**



With the encouragement of her parents and the approbation of her Guru, Kavita began her preliminary studies of the ancient art in 1997. Being quick to comprehend and the demanding training, Kavita took her first step into the world of art as she performed her Junior Arangetram in March of 1999. Kavita was a studious student, participating in countless dance recitals as well as annual practical and theoretical examinations held by Kalaimanram Academy of Fine Arts. Following this oppressive training Kavita presented her Arangetram in August 2002 with the blessing and guidance of her Guru. It was a successful and breathtaking performance highlighting some of the key elements of Bharatanatyam. Enthusiastic about her achievement, she perused to complete her teacher's certificate with the academy. Diligently Kavita worked to gain experience teaching students under the direction of her Guru, as well as completing the necessary criteria's to achieve the Teacher's Diploma. Natuvangam lessons, choreography and a written thesis on the given topic relating to disciplines of Bharatanatyam in the modern world, called "Dancing for the Devine" were a few of the main requirements to complete the training. This allowed her to complete her Teacher's Grade examination and was presented with title "Niruththa Niraignar" at the first Graduation Ceremony of Kalaimanram in October, 2005. Still continuing her passion and drive for the art, Kavita performs in several functions and cultural presentations in the community. She is always liberal to aspiring opportunities to pursue new and exciting promises that come her way.

Currently Kavita is teaching at Kalaimanram in the Brampton location for nearly 3 years where she conducts classes up to the intermediate levels. She has hopes of gaining valuable teaching experience that she can carry with her future. Kavita is also actively involved with teaching, choreographing, and performing at many traditional cultural events such as the CNE and Kondatam Tradeshows. She has also very recently been a part of the Janek Khendry Dance Company in their most recent show "Ganga" September 2009. Academically, she has completed an Honours Bachelor of Commerce Degree from the University of McMaster University and currently works in the financial markets. Kavita is also an active participant in our community where she conducts events as a host, organizing and volunteering for numerous special occasions in her academic and social communities. She hopes her undying passion for Bharatanatyam will lead her career prosperously for years to come.



'Niruththa Niraignar' **Nayani Rajamohan**

